தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.15255/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 24.09.2009.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திருமதி S.திலகம்,<br>2/477, துர்கையம்மன் கோவில் 3–வது தெரு,<br>சுசீலா நகர்,<br>கோவிலம்பாக்கம்,<br>சென்னை – 600 117. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>ஆணையர் அலுவலகம்,<br>புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம்,<br>சிட்டிலப்பாக்கம்,<br>சென்னை – 600 064. |

*****

மனுதாரர் திருமதி S.திலகம் சார்பாக அவரது கணவர் திரு K.சுப்பிரமணி மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு S.பிரகாஷ் பாபு, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், சென்னை இன்று (24.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களிடம் மனை எண்.9A-க்குக் கட்டிட அனுமதி எண்.664/06, கடிதம் எண்.4457/06–ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டதா ? என்று தகவல் கேட்டு மனுச் செய்துள்ளார். 28.07.2009 அன்று

ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (24.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் கோப்பு எண்.4467/06–ல் பிளாக் எண்.9A–க்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும், கோப்பு எண்.4457/06–ல் பிளாக் எண்.9A–க்கு அனுமதி வழங்கப்படவில்லையெனவும் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்பது கோப்புகளில் உள்ள தகவலைத் தருவது. இதில் தவறுகள் இருப்பதாக மனுதாரர் கருதினால் உரிய இடத்தில் முறையிட்டுப் பரிகாரம் தேடிக் கொள்ளும்படி மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 25.09.2009**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.15255/விசாரணை/2009</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
ஆணையர் அலுவலகம்,
புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம்,
சிட்டிலப்பாக்கம்,
சென்னை – 600 064.

திருமதி S.திலகம்,
2/477, துர்கையம்மன் கோவில் 3–வது தெரு,
சுசீலா நகர்,
கோவிலம்பாக்கம்,
சென்னை – 600 117.

*"ptl"*